வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை - செல்வி M.ஆண்டாள்.

எண்.4435 /பொ.1/2019 நாள்.26.11.2019

பொருள் - சிறைகள் - மத்திய சிறை வேலூர் - இச்சிறையில் உதவியாளராக பணி புரிந்து வரும் திரு.S.வேணுகோபால் என்பவரின் பணிவரன் முறை செய்தும் மற்றும் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணை பிறப்பித்தல் - குறித்து.

பார்வை - 1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண் - 5994 / PSD / 2018, நாள் : 29.10.2018.
2. கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் குறிப்பாணை எண். 34479 / ES. 1 / 2018 - 2, நாள் : 26.04.2019.
3. இவ்வலுவலக செயல் முறை ஆணை எண். 4435 / பொ.1 /2019, நாள்: 02.05.2019.
4. திரு.எஸ்.வேணுகோபால், உதவியாளர்,மத்திய சிறை, வேலூர், பணியேற்பு மனு நாள்: 02.05.2019

*********

வேலூர் மத்திய சிறை கண்காணிப்பாளரால் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி - 2 (A) தேர்வின் உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, சிறைத்துறைக்கு ஒதுக்கீடு பெறப்பட்டு, பார்வை இரண்டில் காணும் கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் குறிப்பாணையின் பேரில், பார்வை மூன்றில் காணும் வேலூர் மத்திய சிறைக்கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணையின்படி, திரு. S.வேணுகோபால், தற்காலிக உதவியாளராக பணிநியமனம் பெற்று பார்வை நான்கில் காணும் இவரது பணியேற்பின் மனுவின்படி 02.05.2019 முற்பகல் முதல் பணியேற்பு செய்த நாளில் இவரது பணிவரன் முறைப்படுத்தப்பட்டு 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு அமைச்சு பணி நூல் விதி தொகுதி II - ல் சார்நிலைப் பணிகள் சிறப்பு விதி 34 (அ) உடன் படிக்கப்பட்ட பிற்சேர்க்கை V மற்றும் சார்நிலைப் பணி விதிகள் Vol -26 மற்றும் 28 - ன் படி, இவர் மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவக் காலத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவகாலத்தில் கீழ்காணும் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார்.

i ) மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு

ii) பவானி சாகரில் நடத்தப்பெறும் உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.

கண்காணிப்பாளர்
மத்திய சிறை, வேலூர்.

பெறுநர்
திரு. S.வேணுகோபால், உதவியாளர், மத்திய சிறை,வேலூர்

(நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

1.கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர், சென்னை.

2. சிறைத்துறை துணைத் தலைவர், வேலூர் சரகம், வேலூர்.

நகல் - நிர்வாக அலுவலர் மற்றும் அலுவலக மேலாளர், மத்திய சிறை, வேலூர்

நகல்- கருவூல அலுவலர், மாவட்ட கருவூலகம், வேலூர்.

நகல் -பொ.3/ இளநிலை உதவியாளர் மத்திய சிறை வேலூர் (நடப்பு எண்ணில்) இவ்விவரத்தினை சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல் - பொ.1 உதவியாளர் மத்திய சிறை வேலூர், இருப்பு கோப்பு